சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:183/2023 Date: 07.07.2026

வாதி தரப்பு சாட்சி–1(P.W.1) ன் வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.N.வீரராஜ், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : லட்சுமி | சாதி | : | |
| க/பெ | : பால்பாண்டி | சமயம் | : | |
| கிராமம் | : சதானந்தபுரம் | தொழில் | : | |
| தாலுகா | : சிவகாசி | வயது | : | 52 |

<u>முதல் விசாரணை–</u>

நான் இவ்வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கு விபரங்கள் தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது ஆதார் அடையாள அட்டை நகல் **வா.சா.ஆ.1**(அசலுடன் ஒப்பிடப்பட்டது). எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே 09.03.2023 ம் தேதி ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.2.** தாவா சொத்து பிரதிவாதியின் தந்தை பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3.** 12.06.2023 ம் தேதி பிரதிவாதி மீது நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு கைநகல் **வா.சா.ஆ.4.** பிரதிவாதி என் மீது சாத்துார், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.60/2023 பிராது சார்பு நகல் **வா.சா.ஆ.5.** பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)